# இலக்கிய மரபு.pdf/15



**22 செப்டம்பர், 2024 அன்று விக்கிமூலத்தில் இருந்து பதிவிறக்கப்பட்டது**

மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெருஅர்.*

நெடுநல்வாடை என்ற பழம் பாட்டினுள், உயர்ந்த காதலரின் வாழ்வு பாடப்பட்டுள்ளது. ஆயினும் அது அகப்பொருளாகக் கருதப்படுதல் இல்லை. காரணம்: அதனுள் தலைவனுடைய வேல் பாண்டியர்க்கு உரிய வேப்பமாலை சூடி விளங்குவதாகப் பாடப்பட் டிருத்தலே ஆகும். "இப்பாட்டு, சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமை யின் அகப்பொருளா மேனும்,வேர்பு தலை யாத்த நோன் காழ் எஃகம்' t என அடையாளப்பூக் கூறினமையின், அகமாகாதாயிற்று" என நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். ஐந்திணை இந்த அகப் பொருள், காதணின் மன நிலையையும் வாழ்வையும் ஒட்டி ஐவகையாகப் பகுக்கப்பட்டு, அகனைந் திணை எனப்பட்டது. கூடல், பிரிதல்,இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் நிலைகள் பற்றி முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஐவகையாக அமைந்தன. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு எனப் பத்துப்பாட்டில் உள்ளவை இவ்வாறு அமைந்தனவே ; பாலைக்கலி, நெய்தற் கலி எனக் கலித்தொகையில் அமைந்தனவும் காண்க. நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து, நானிலம் என்று வழங்கும் மரபு உண்டு. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். இந்நால்வகை நிலங்களுள், மழை யில்லாமையால் வறட்சியுற்றுக் கெடுவன குறிஞ்சியும்

•

தொல். பொருள். அகத்திணையியல், 54. நெடுநல்வாடை, 176.

# இந்த மின்னூலைப் பற்றி

உங்களுக்கு இம்மின்னூல், இணைய நூலகமான, விக்கிமூலத்தில் இருந்து கிடைத்துள்ளது[1].

இந்த இணைய நூலகம் தன்னார்வலர்களால் வளருகிறது. விக்கிமூலம் பதிய தன்னார்வலர்களை வரவேற்கிறது. தாங்களும் விக்கிமூலத்தில் இணைந்து மேலும் பல மின்னூல்களை அனைவரும் படிக்குமாறு செய்யலாம்.

மிகுந்த அக்கறையுடன் மெய்ப்பு செய்தாலும், மின்னூலில் பிழை ஏதேனும் இருந்தால் தயக்கம் இல்லாமல், விக்கிமூலத்தில் இம்மின்னூலின் பேச்சு பக்கத்தில் தெரிவிக்கலாம் அல்லது பிழைகளை நீங்களே கூட சரி செய்யலாம்.

இப்படைப்பாக்கம், கட்டற்ற உரிமங்களோடு (பொதுகள / குனு -Commons /GNU FDL )[2][3] இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, இந்த உரையை நீங்கள் மற்றவரோடு பகிரலாம்; மாற்றி மேம்படுத்தலாம்; வணிக நோக்கத்தோடும், வணிக நோக்கமின்றியும் பயன்படுத்தலாம்

இம்மின்னூல் சாத்தியமாவதற்கு பங்களித்தவர்கள் பின்வருமாறு:

- Gunathamizh
- Info-farmer

1. ↑ http://ta.wikisource.org
2. ↑ http://creativecommons.org/licenses/by-sa/3.0/
3. ↑ http://www.gnu.org/copyleft/fdl.html